நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 104/2020

## P.W. 9 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வமணி |
| தந்தை / கணவர் பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | காவேரிகிராஸ் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 9 |
| வயது | : | 48 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 25–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.58PM)

1. நான் தற்போது காவேரிகிராஸில் குடியிருக்கிறேன். நான் வீட்டில்தான் உள்ளேன்.அ.சா 1 எனது உறவினர். அ.சா1ன் குடும்பதாருக்கும் எதிரிகள் குடும்பத்தாருக்கும் வழி தடப்பிரச்சினை இருந்து வருகிறது.நடக்கும் தடத்தில் எதிரிகள் குடும்பத்தார் முள்ளை போட்டு வைத்தார்கள். அதை எடுத்துவிட்டு

அ.சா1 வெளியில் சென்ற போது எதிரிகள் நான்கு பேரும் அ.சா1 மற்றும் 2 யை கல் மற்றும் தேக்சாவால் அடித்தார்கள். அதை நான் பார்த்தேன்.

2. நான்கு நாட்கள் கழித்து போலீசார் சண்டை நடந்த இடத்திற்கு வந்து படம் வரைந்து எழுதி அங்கிருந்த கல்லையும் தேக்சாவையும் எடுத்து கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெத்து மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். ( அவைகள் முறையே 4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. என் வீட்டுக்கும் தங்கராஜ் வீட்டுக்கும் ஒரு வீடு தான் இடையில் உள்ளது. அந்த வீடு மலர்க்கொடி என்பவருக்கு சொந்தமானது. அந்த மலர்க்கொடி எனது நாத்தனார் ஆவார். தங்கராஜ் வீட்டுக்கு மேற்கே தென் வடலாக ஒரு வீதி செல்கிறது என்றால் சரிதான். அதேபோல் தங்கராஜ் வீட்டிற்கு கிழக்கு மேற்காக ஒரு வீதி செல்கிறது என்றால் சரிதான். மேற்படி கிழக்கு மேற்காக செல்லும் வீதியில் மேற்கு திசையில் கடைசி வீடு ஆஜர் எதிரி சேகரின் வீடு என்றால் சரிதான். கிழக்கு மேற்காக செல்லும் வீதி சேகர் வீட்டுடன் முடிந்து விடுகிறது என்றால் சரிதான்.

2. சேகர் வீட்டுக்கு மேற்கே மாது என்பவரின் விவசாய நிலம் உள்ளது என்றால் சரிதான். அவர் அவரது நிலத்துக்கு வேலி போட்டு வைத்திருக்கிறார் என்றாலும் தற்பொழுது காம்பௌண்ட் சுவர் கட்டி விட்டார் என்றாலும் சரிதான். அ.சா.1 தங்கராஜ் தனது வீட்டில் இருந்து செல்ல வேண்டுமென்றால் கிழ மேல் வீதியில் மேற்கு நோக்கி செல்லலாம் என்றாலும் தென் வடல் வீதியிலும் செல்லலாம் என்றாலும் சரிதான். ஆஜர் எதிரி மோகன்ராஜ் கடந்த இரண்டு முறையாக கவுன்சிலராக இருந்தார் என்றால் சரிதான்.

3. இந்த வழக்கில் சாட்சி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதேஷ் மற்றும் சிவராஜ் எனக்கு சம்மந்திகளாகிறார்கள். அவர் அ.சா.2 மணிவண்ணனின் மாமனார் சாட்சி மாதேஷ் ஆவார். மேற்படி மாதேஷ் அவரது வீட்டுக்கு முன்பாக செல்லும் வீதி தனக்கு சொந்தமானது என்று சொல்லி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அவர் ஆதரவாக உத்தரவு பெற்றுக் கொண்டார் என்றால் சரிதான். அது

சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து தீர்ப்பு செல்லாது என்று மேல்முறையீடு செய்திருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. ஊரில் மாரியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். அது சம்பந்தமாகவும் தங்கராஜ், மாதேஷ், சிவராஜ் ஆகியோர்களுக்கும் பொது மக்களுக்கும் பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். கோவிலில் பதவி கேட்டு நாங்களும் ஆர்ப்பாட்டம் செய்தோம்.
5. சம்பவத்தின் போது பொதுமக்கள் சுமார் 50 நபர்கள் இருந்திருப்பார்கள். அந்த கூட்டத்தில் யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. இவர்கள் நான்கு பேர்கள் தான் அடித்தார்கள். தங்கராஜ், மணிவண்ணன், எலிசபெத் ஆகியோர் சேர்ந்து எதிரிகளை அடித்து விட்டதாக ஒரு வழக்கு உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் சாட்சி மாதேஷ் வீதியை ஆக்கிரமிப்பு செய்து கொண்டதால் 1-ஆம் எதிரி மோகன்ராஜ் என்பவர் கவுன்சிலர் என்ற முறையில் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற முயற்சி செய்ததால் அவர் மீது பொய் புகார் அளித்து பொய் சாட்சி அளிக்கிறோம் என்றால் சரியல்ல.
6. அதேபோல் தங்கராஜ், மணிவண்ணன், எலிசபெத் ஆகிய மூவரும் எதிரிகளை தாக்கிய வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இந்த பொய் வழக்கை தாக்கல் செய்து அவர்களுக்கு ஆதரவாக நான் சித்தி என்ற முறையில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியில்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-05.18PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**